ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/65 - 2025 ඔක්තෝබර් මස 18 වැනි සෙනසුරාදා - 2025.10.18

*2458/65 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, என்னால் 2024 நவெம்பர் மாதம் 25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல், 2025 ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரத்தக்கதாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2025, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி.

1A - PG 7293 — 354 (2025/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

(1) அந்த அறிவித்தலின் "இல. 01. பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 28 விடயத்தை நீக்கி பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்:

28. கடல்சார் பாதுகாப்புக்கான நீர்வரைவியல் அளவீடுகளை மேற்கொள்ளல், கப்பல் வழிசெலுத்தல் பதிவுகளைத் தயாரித்தல் மற்றும் கப்பல் போக்குவரத்து தகவல்களை இற்றைப்படுத்தல் மூலம் கப்பல் போக்குவரத்து பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர் பாதுகாப்பு பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குரிய கடலில் நீர்வரைவியல் பணிகளை ஒழுங்குபடுத்தல்

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 25 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்:

26. தேசிய நீரியல் சபை
27. இலங்கையின் தேசிய நீரியல் அலுவலகம்

(இ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

6. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

(ஈ) அதன் III ஆம் நிரலின் (தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டம்

(2) அந்த அறிவித்தலின் "இல. 02. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் (சிங்கள அறிவித்தலில் மாத்திரம்) இல. 38 விடயத்துக்கு பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்;

39. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்

(ஆ) அதன் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 37 விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்;

37. II ஆம் நிரலின் 57 முதல் 63 வரை காணப்படும் நிறுவனங்கள் மீளாய்வு செய்யப்படும்.

(இ) அதன் I ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

11. இருதரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் அவ் ஒப்பந்தங்களினூடாக ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல் உள்ளிட்ட சர்வதேச மற்றும் பிராந்திய வர்த்தக ஒருமைப்பாட்டை இலகுபடுத்தும் மற்றும் இணைப்பாக்கம் செய்யும் கேந்திர நிலையமாகச் செயற்படுதல்

(ஈ) அதன் II ஆம் நிரலின் இல. 52 விடயத்தை நீக்கி பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

52. ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ143)

(உ) அதன் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 55 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்:

56. பணச்சூதாட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை

(ஊ) அதன் II ஆம் நிரலின் இல. 56 முதல் இல. 62 வரை விடயங்களை முறையே இல. 57 முதல் 63 வரை என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(எ) அதன் III ஆம் நிரலின் "2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி பிரதிலாபங்கள் சட்டம்" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

- 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டம்
- 2024 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் சட்டம்
- 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்

(3) அந்த அறிவித்தலின் "இல. 03. வலுசக்தி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 2 விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

2. வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 12 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

13. நெஷனல் சிஸ்டம் ஒபரேட்டர் பிரைவேட் லிமிட்டெட்
14. நெஷனல் ட்ரான்ஸ்மிஷன் நெட்வேர்க் சர்விசஸ் பிரவைடர் பிரைவேட் லிமிட்டெட்
15. இலெக்ரிசிட்டி டிஸ்ரிபியூஷன் லங்கா பிரைவேட் லிமிட்டெட்
16. இலெக்ரிசிட்டி ஜெனரேஷன் லங்கா பிரைவேட் லிமிட்டெட்

(இ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்:

10. இலங்கை அணுசக்தி சபை
11. இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை

(ஈ) அதன் III ஆம் நிரலின் (சிங்கள அறிவித்தலில் மாத்திரம்) "2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) சட்டம்" எனக் காணப்படும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தைப் பதிலீடு செய்வதன் மூலம்:

- 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, (விசேட ஏற்பாடுகள்) பெற்றோலிய உற்பத்திகள் சட்டம்

(உ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்தி சட்டம்

(4) அந்த அறிவித்தலின் "இல. 04. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலின் இல. 11 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்:

12. கறுவா அபிவிருத்தி திணைக்களம்

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 12 முதல் 29 வரை விடயங்களை முறையே இல. 13 முதல் 30 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் III ஆம் நிரலின் "(1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்" எனக் காணப்படும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

- (1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சட்டம்

(ஈ) அதன் III ஆம் நிரலின் (தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்:

- (1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

(5) அந்த அறிவித்தலின் “இல. 05. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்:

12. ஸ்ரீ லங்கா இன்டநஷனல் ஆர்பிடேஷன் சென்ரர் (கரன்டி) லிமிட்டெட்
17. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்
26. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயக பணியகம்

(ஆ) அதன் III ஆம் நிரலின் “(2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றமொன்றில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாத்தல் சட்டம்” எனக் காணப்படும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

- (2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) குற்றமொன்றில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாத்தல் சட்டம்

(இ) அதன் III ஆம் நிரலின் “(2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகச் சட்டம்” எனக் காணப்படும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலம்:

- 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயச் சட்டம்

- 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல் சட்டம்

- 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டம்

- 2024 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டம்

- 2024 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டம்

- 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டம்

(ஈ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, புனர்வாழ்வுப் பணியகச் சட்டம்

(6) அந்த அறிவித்தலின் “இல. 06. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

6. இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை

(ஆ) அதன் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 15 விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்;

15. இலங்கை சமுத்திரம்சார் பல்கலைக்கழகம்

(இ) அதன் III ஆம் நிரலின் (தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- (1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்

(7) அந்த அறிவித்தலின் “இல. 08. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 3 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்;

4. இருதரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் அவ் ஒப்பந்தங்களினூடாக ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல் உள்ளிட்ட சர்வதேச மற்றும் பிராந்திய வர்த்தக ஒருமைப்பாட்டை இலகுபடுத்தும் மற்றும் இணைப்பாக்கம் செய்யும் கேந்திர நிலையமாகச் செயற்படுதல்.

(ஆ) அதன் I ஆம் நிரலின் இல. 7 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்:

8. சர்வதேச புலமைச் சொத்து பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தை நிர்வகிப்பதற்கான பணியகத்தின் வெளியீட்டு உரிமை மற்றும் சர்வதேச புலமைச் சொத்து பணியகத்தின் வெளியீட்டு உரிமை தொடர்பான பணிகள்
9. ஆக்கவுரிமை வழங்கும் செயன்முறையை வினைத்திறன்மிக்கதாக ஆக்குதல்

(இ) அதன் II ஆம் நிரலின் இல. 17 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்;

18. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கூட்டுத்தாபனம்

(ஈ) அதன் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 13 விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

13. ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டெட்

(உ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

17. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி

(ஊ) அதன் III ஆம் நிரலின் “1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தச் சட்டம்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலம்;

- (2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டம்

- (1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) சங்கங்கள் கட்டளைச் சட்டம்

(8) அந்த அறிவித்தலின் “இல. 09. சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் II ஆம் நிரலின் இல. 41 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்:

42. செலசினே மீடியா சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

(ஆ) அதன் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள இல. 24 விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

24. ஆயுர்வேத கல்வி மற்றும் வைத்தியசாலைச் சபை

(இ) அதன் II ஆம் நிரலின் இல. 8 விடயத்தை நீக்கி பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்:

8. இலங்கை தாதியர் சபை

(ஈ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

29. நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு

(உ) அதன் III ஆம் நிரலின் சிங்கள அறிவித்தலில் “2070 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஓமியோபதி சட்டம்” எனவும் ஆங்கில அறிவித்தலில் “Homoeopathy Act No. 7 of 1970” எனவும் காணப்படும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

- (2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) ஓமியோபதி சட்டம்

(ஊ) அதன் III ஆம் நிரலின் (தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) “2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம்” எனக் காணப்படும் விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்;

- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம்

(எ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

(9) அந்த அறிவித்தலின் “இல. 10. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் :

25. செலசினே மீடியா சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

(ஆ) அதன் III ஆம் நிரலின் “1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

- 1942 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, தேசிய அருங்காட்சியகங்கள் கட்டளைச் சட்டம்

(இ) அதன் III ஆம் நிரலின் “1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சபைச் சட்டம்” விடயத்துக்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம்:

- (1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சபைச் சட்டம்

(10) அந்த அறிவித்தலின் “இல. 11. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அந்த தலைப்பு இல. 11. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்” எனவும்;

(ஆ) அதன் I, II மற்றும் III ஆம் நிரல்களில் காணப்படும் விடயங்களை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்:

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| 1. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி விடயங்களுடனும் மற்றும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் | 1. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>2. மக நெகும<br>3. அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்<br>4. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு<br>5. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய சபை<br>6. இலங்கை புகையிரதத் திணைக்களம் | • 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பொது வழிகள் சட்டம்<br>• 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டம்<br>• 1950 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க புகையிரதச் சட்டம்<br>• 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம் |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், செயற் படுத்துதலும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்.<br><br>2. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற உரிய பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மனிதநேய ரீதியிலும் வழங்குதல்.<br><br>3. ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.<br><br>4. கிராமிய, நகர மற்றும் நகர்புறப் பிரதேசத் தொடர்புகளை விரிவுபடுத்தி மக்களைக் கேந்திரமாகக்கொண்ட பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர்தரத்திலான தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பினை மேம்படுத்தலும் அவற்றைச் சிறந்தமுறையில் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.<br><br>5. அதிவேகப் பாதைகளின் அபிவிருத்திப் பாவனைக் கட்டணங்களை விதித்தலும் சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும்<br><br>6. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங் களுக்குச் சொந்தமான வீதிகள் பற்றிய தேசிய ரீதியிலான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் | 7. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் (தனியார்)கம்பனி<br>8. இலங்கை போக்குவரத்து சபை<br>9. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்<br>10. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்<br>11. சஹஸ்யா இன்வெஸ்ட்மன்ட் லிமிடட்<br>12. நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>13. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>14. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை (பொது வசதிகள் சபை)<br>15. செலென்திவ இன்வெஸ்டமென்ட் லிமிட்டெட்<br>16. தேசியப் பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்<br>17. இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள கம்பனிகள் மற்றும் இணை கம்பனிகள் | • 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்<br>• 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம்<br>• 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்<br>• 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்<br>• 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர, கிராம நிர்மாணக் கட்டளைச் சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம்<br>• 2018 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• 1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபைச் சட்டம்<br><br>• 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனச் சட்டம்<br><br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தல் | | |
| 7. வாகன நெரிசல்களைக் குறைப்பதற்காக வாகனத் தரிப்பிடங்களை நிறுவுதல் | | |
| 8. கிராமிய பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்தலும் நவீன மயப்படுத்தலும் | | |
| 9. பிரதான பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகளுக்காக உயர்மட்டத்திலான பிரவேசத்திற்காக மாற்று பாதைத் தொகுதியொன்றை தயாரித்தல் | | |
| 10. பாதை வலையமைப்புடன் இணைந்த பாலங்கள் தொகுதியை நவீன மயப்படுத்தல் | | |
| 11. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல் | | |
| 12. பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் | | |
| 13. சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் | | |
| 14. தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல் | | |
| 15. பஸ்வண்டிகள் உற்பத்தி மற்றும் போக்குவரத்து துறைக்குரிய உள்ளூர் கைத்தொழில் கட்டமைப் பொன்றை ஏற்படுத்துதல் | | |
| 16. புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், இருக்கின்ற புகையிரதப் பாதைகளை விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை சுவீகரித்தலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 17. துறைமுகங்களுக்குப் புகையிரதம் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வசதிகளை ஏற்படுத்துதலும் விஸ்தரித்தலும் | | |
| 18. புகையிரத சேவை 24/7 ஏற்பாடு | | |
| 19. மின்சார புகையிரதங்களைக் கொண்டிருப்பதற்காக புகையிரத முறைமையை படிப்படியாக விருத்தி செய்தல் | | |
| 20. ஒற்றைத் தண்டவாள புகையிரத சேவை மற்றும் இலகு புகையிரத வீதி முறையை அறிமுகம் செய்தல் | | |
| 21. அரசாங்க மற்றும் தனியார் சேவைகளை ஒன்றிணைத்து புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பஸ் கம்பனி தொகுதியொன்றை உருவாக்குதல | | |
| 22. POS கட்டணச்சீட்டு இயந்திரங்களை அனைத்து பஸ்களிலும் அறிமுகப்படுத்துதல் | | |
| 23. பிரதான நகரங்களுக்கிடையில் பாதுகாப்பான துவிச்சக்கரவண்டி பாதைகளை உருவாக்குதல் | | |
| 24. பிரதான பஸ் மற்றும் புகையிரத நிலையங்களில் துவிச்சக்கரவண்டி தரிப்பிட வசதிகளுக்கான ஏற்பாடு | | |
| 25. பிரதான நகரங்களில் வீதிக்கு இரண்டு பக்கத்திலும் நடைபாதைகளை நிருமாணித்தல் | | |
| 26. நீர் மார்க்கப் போக்குவரத்தினை மேம்படுத்துதல் தொடர்பில் ஆய்வு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை அலகொன்றினை உருவாக்குதல் | | |
| 27. நீர் மார்க்கம் மூலமான பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து சேவைகளை நடைமுறைப்படுத்துதல் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 28. புகையிரதங்களிலும், பஸ்களிலும் மற்றும் பஸ் தரிப்புகளிலும் புகையிரத நிலையங்களிலும் முதியவர்களும், மாற்றுத்திறனாளிகளும் அவற்றை சென்றடைவதற்குரிய வசதிகளுக்கான விசேட ஏற்பாடு | | |
| 29. மோட்டார் வாகனங்களின் பதிவும், அனுமதிப்பத்திரம் வழங்கலும் | | |
| 30. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் | | |
| 31. மோட்டார் வாகனங்களுக்கு உரிய வழிகாட்டி நெறிகளை மற்றும் சட்டங்களை ஒழுங்குபடுத்தலும் வழங்குதலும் | | |
| 32. பச்சைவீட்டு வாயு வெளியேற்றப்படுதலைக் குறைப்பதற்காக போக்குவரத்துத் துறை பங்களிக்கக்கூடிய வகையில் உபாயமுறையிலான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 33. மாநகர, நகர, புறநகர் அபிவிருத்தி திட்டங்களும் அதற்கு இணையான நடவடிக்கைகளும். | | |
| 34. நகர்ப்புறங்களின் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒன்றிணைத்த விதிமுறையாக மேம்படுத்தலும் மற்றும் ஒழுங்குறுத்தலும் | | |
| 35. கட்டுப்படியான வீடமைப்புத் திட்டங்களை நகர பிரதேசங்களில் விருத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல் மற்றும் இந்த முன்னெடுப்புக்கு பொருத்தமான காணிகளை வழங்குதல் | | |
| 36. நகரப்புறத் திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் | | |
| 37. பொறுப்பற்ற கழிவகற்றலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 38. சகல நகர நிர்மாணங்களையும் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கமையச் செய்வதை ஒழுங்குறுத்து வதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் | | |
| 39. சகல நகர நிர்மாணங்களின் போது வாகனத் தரிப்பிடங்களை அமைப்பது மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்காக நுழைவு வசதிகளை ஏற்படுத்துவதை உறுதி செய்தல் | | |
| 40. தேசிய பௌதீகத் திட்டங்கள் மற்றும் பிரதேச பௌதீகத் திட்டங்களைத் தயாரித்தல் | | |
| 41. இணைந்த நகர அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும்முகமாக தேசிய பௌதீகத் திட்டங்களின் அடிப்படையில் அனைத்து நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளலும் ஒழுங்குறுத்தலும். | | |
| 42. கூட்டாதனச் சொத்துக்கள் முகாமை மற்றும் ஒழுங்குறுத்தல் பணிகள் | | |
| 43. பொதுமக்கள் கூட்டாதன சீர்திருத்தமும் வினைத்திறமை மற்றும் துரிதமான முறையில் வீடுகளின் உடைமையைக் கையளித்தல் | | |
| 44. தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| 45. நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்களைப் பொதுத்திட்டமொன்றுக்கமைய அபிவிருத்தி செய்வதற்கு புதிய வழிகாட்டல் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும்*<br>*நியதிச்சட்ட நிறுவனங்களும்*<br>*அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட*<br>*வேண்டிய சட்டங்கள் மற்றும்*<br>*கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 46. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற ஏனைய அனைத்து விடயங்கள் | | |
| 47. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் மேற்பார்வையிடுதல் | | |

(11) அந்த அறிவித்தலின் “இல. 12. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 9 விடயத்தை நீக்கி பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் :

9. போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு மற்றும் வேறு ஏதேனும் சட்டத்தின் மூலம் புனர்வாழ் வளிக்கப்பட வேண்டுமென கருதப்படுபவர்களை புனர்வாழ்வுக்கு பரிந்துரைத்தல்

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 5 விடயத்துக்கு பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் :

6. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
7. புனர்வாழ்வளிப்பு பணியகம்

(இ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் :

5. அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்

(ஈ) அதன் III ஆம் நிரலின் “2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் :

- 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, புனர்வாழ்வளித்தல் பணியகச் சட்டம்
- 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றங்கள் சட்டம்
- 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்கை அனுமதிப்பத்திரச் சட்டம்

(உ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

(12) அந்த அறிவித்தலின் “இல. 14. சுற்றாடல் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் :

2. புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்
3. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 4 முதல் 12 வரை விடயங்களை முறையே இல. 2 முதல் இல. 10 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் III ஆம் நிரலின் (தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) "1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புச் சட்டம்" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம் :

- 1907 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்

(ஈ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்

(13) அந்த அறிவித்தலின் "இல. 15. நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அந்த தலைப்பு "இல.15. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்" எனவும்;

(ஆ) அதன் I, II மற்றும் III ஆம் நிரல்களில் காணப்படும் விடயங்களை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் :

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| 1. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் விடயங்களுடனும் மற்றும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், செயற்படுத்துதலும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்.<br>2. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற உரிய பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மனிதநேய ரீதியிலும் வழங்குதல்.<br>3. ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, | 1. இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்<br>3. வாணிப கப்பற்றுறைச் செயலகம்<br>4. இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை<br>5. வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி<br>6. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் | • 1971 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• 1865 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க கப்பல் உதவியாளர்கள் கட்டளைச்சட்டம<br>• 1971ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டம்<br>• 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம்<br>• 1908 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமேடைதுப்புரவாக்குதல் மற்றும் ஆக்கவுரிமைச் சிட்டைக் கட்டளைச் சட்டம்<br>• 1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, படகுகள் கட்டளைச் சட்டம்<br>• 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைச் சட்டம்<br>• 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானச் சேவைகள் சட்டம்<br>• 1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, வான்செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.<br>4. வர்த்தக துறைமுகங்களின் அபிவிருத்தியும் முகாமையும் மற்றும் அவற்றின் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதலும்<br>5. கொள்கலன் முனையங்களை அபிவிருத்தி செய்தல்<br>6. கப்பற்படையாட்சித்துறைக்குச் சொந்தமானவை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களினதும்; வெளிச்சவீடுகள் கலங்கரை விளக்கங்களினதும் எண்ணெய் தாங்கி அமைவுகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தியும் நிருவாகமும்<br>7. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக் கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல்<br>8. கப்பற்சேவைகளுக்கான போட்டி விதிகளை விதித்தல்<br>9. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக் கிடையில் ஆலோசனை களுடனான கூட்டிணைப்பை உறுதிப்படுத்துதலும் ஆதரவளித்தலும்<br>10. கப்பற்சேதங்களின் பெறுகையும் சமுத்திரச் சிதைவுப் பொருட்களின் மீட்புகளும்<br>11. கப்பற் கட்டணங்களும் கப்பற்சேவை அலுவல்களும் கரையோரம் சார்ந்த பயணிகள் போக்குவரத்தினை ஏற்படுத்துதல்<br>12. கப்பல்களின் உரிமைகள், கருமமாற்றல், கப்பல் முகாமைத்துவம், கப்பல் தரக முகாமைத்துவம் மற்றும் முகவர் சேவைகள். | | • 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விமானப் போக்குவரத்துச் சட்டம்<br>• 1950 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விமானத் தரிப்பிடம் மற்றும் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| 13. சுங்க முகவராண்மைகள் மற்றும் ஒட்டுமொத்தக் கப்பல் பண்டங்களை ஏற்றிச் செல்லல் தொடர்பான தீர்வுகள் | | |
| 14. சர்வதேச மற்றும் உள்ளூர் விமான நிலையங்களின் அபிவிருத்தியும், ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளும் | | |
| 15. விமான நிலையங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளின் கட்டணங்கள் மற்றும் தரங்கள் பற்றிய ஒழுங்குறுத்துகை. | | |
| 16. சர்வதேச விமானப் பயணங்களை விரிவுபடுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட ஏனைய அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | |
| 17. இலங்கை விமான நிலையங்கள் வெளிநாடுகளால் பாவிக்கப்படுவதற்குரிய மேம்படுத்துகையும் ஒழுங்குறுத்துகையும். | | |
| 18. விமானங்கள் மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்வதை விரிவுபடுத்துதல் | | |
| 19. உள்ளூர் விமானப் பயணங்களை மேம்படுத்துதல் | | |
| 20. தனியார் விமானப் பயணச் சேவைகளின் ஒழுங்குறுத்துகை. | | |
| 21. விமானங்களைப் பதிவுசெய்தல். | | |
| 22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற ஏனைய அனைத்து விடயங்கள். | | |
| 23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் மேற்பார்வையிடுதல் | | |

(14) அந்த அறிவித்தலின் “இல. 17. பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

26. சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப தொழில் தொடர்பு நியமங்கள், ஊழியர் நிருவாகம், நலன்புரி மற்றும் சுகாதாரம் பொருட்டு கொள்கைகளை உருவாக்குதலும் செயற்படுத்துதலும்

(ஆ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்:

- 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்

(15) அந்த அறிவித்தலின் “இல. 18. தொழில் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் III ஆம் நிரலின் “1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, சிரம வாசனா நிதியச் சட்டம்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்:-

- 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச வேதனச் சட்டம்
- 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம்
- 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இந்தியக் குடிவரவுக் கட்டளைச் சட்டம்
- 1889 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பெருந்தோட்டத் தொழிலாளர் (இந்திய) கட்டளைச் சட்டம்
- 1978 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, தனியார் துறை பயிற்சி பெறுவோரை சேவையில் ஈடுபடுத்தும் சட்டம்
- 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டம்

(16) அந்த அறிவித்தலின் “இல. 19. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்:-

8. நவீன தொழினுட்பங்களை கடைப்பிடிப்பதன்மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப வசதிகளை வழங்கவதற்கு தேவையான வழிமுறைகளை எடுத்தல்
9. உற்பத்தித்திறனை மேம்படுத்தல் மற்றும் சேவை வழங்கலின் வினைத்திறன் பொருட்டு அரசாங்க முகவர் நிலையங்களுக்கிடையிலான தகவல் தொழினுட்ப முன்னெடுப்புகளுக்கு வசதியளித்தலும் மேற்பார்வை செய்தலும்.
10. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
11. சமூகத்தின் எல்லா பிரிவினரிலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப பயன்பாட்டினை ஊக்குவித்து அதிகரிப்பதற்கு உபாயங்களை விருத்திசெய்தல் அத்துடன் தனியார் துறையுடன் கூட்டாண்மையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப முன்னெடுப்புகளை ஒருங்கிணைத்து வசதியளித்தல்
12. கணினிவழி பாதுகாப்பு தொடர்பிலான முனைப்பான தலையீடு மற்றும் தடுப்பு சம்பவங்கள்
13. டிஜிட்டல் தடயவியல் புலனாய்வுக்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல்
15. டிஜிட்டல் தொழினுட்ப முயற்சிகளை விஸ்தரித்தல் தொடர்பான விடயங்கள்
18. கிராமிய பிரதேசங்களுக்கு தொடர்பாடல் வசதிகளை விஸ்தரிப்பதற்கு மையப்படுத்திய உறுதியான வலையமைப்பினை கட்டியெழுப்புதல்
19. 5G மற்றும் LTE+ போன்ற அதிர்வெண் வீச்சில் உயர் வினைத்திறனுடனான தொழினுட்பத்துக்கு முன்னுரிமை அளித்தல்;

(ஆ) அதன் II ஆம் நிரலின் இல. 16 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

17. இலங்கை அணுசக்தி சபை
18. இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை

(இ) அதன் III ஆம் நிரலின் “2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம்” விடயத்தை நீக்கி பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம்;

- 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டம்

(17) அந்த அறிவித்தலின் “இல. 20. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 06,10,11,12 மற்றும் 13 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களை பதிலீடு செய்வதன் மூலம்;

06. விசேட தேவையுடையவர்களின் தேவைகளை இனங்காணல் மற்றும் அவர்களது தேவைகளை நிறைவேற்றுதல்;
10. விசேட தேவையுடைய ஆட்கள் தொடர்பில் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் சமவாயங்களுக்குரிய விடயங்கள்
11. விசேட தேவையுடைய ஆட்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சியளித்தலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக இயைபான நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்
12. விசேட தேவையுடைய ஆட்கள் பிரதான மக்கள் சமூகத்துடன் சேர்ந்து செயற்படக்கூடியதாக தேவையான கொள்கைரீதியான மாற்றங்களைத் தகுந்த முறையில் மேற்கொள்ளவும் அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும்
13. விசேட தேவையுடைய ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

(ஆ) அதன் I ஆம் நிரலின் இல. 14 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

15. வறுமை ஒழிப்புக்கான பன்முக அணுகுமுறைகளை உள்ளடக்கிய சமூக வலுவூட்டுகை பணிகளை மேற்கொள்ளல்
16. கிராமிய அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.
17. சமூகப் பணிகள் தொடர்பான கல்வி மற்றும் தொழில்முறை திறன்களை சமூகமயப்படுத்தல்
18. சமூக வலுவூட்டல், சமூகப் பாதுகாப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி மேம்பாடு
19. தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்து, நாட்டின் அபிவிருத்தி செயல்முறைக்கு அவர்களின் பங்களிப்பிற்கான வாய்ப்புகளை வழங்குதல்.
20. உலக உணவுத் திட்டத்துடன் ஒத்துழைப்பை முகாமை செய்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்

(இ) அதன் I ஆம் நிரலின் இல. 15 மற்றும் 16 ஆகிய விடயங்களை முறையே 21 மற்றும் 22 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(ஈ) அதன் II ஆம் நிரலின் இல. 10 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

11. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்
12. உலக உணவுத் திட்டத்துடன் ஒத்துழைப்புக்கான கூட்டாண்மை செயலகம்

(18) அந்த அறிவித்தலின் “இல. 21. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் (சிங்கள அறிவித்தலில் மாத்திரம்) இல. 33 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

34. பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்யும் முகமாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

35. தேவையான கடன், காப்புறுதி மற்றும் பிற வசதிகளை வழங்குவதன்மூலம் உற்பத்தியாளர்களையும், ஏற்றுமதியாளர்களையும் ஊக்குவித்தல்

(ஆ) அதன் I ஆம் நிரலின் (சிங்கள அறிவித்தலில் மாத்திரம்) பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்;

7. புலமைச் சொத்து தொடர்பிலான சருவதேச சமவாயத்தின் நிருவாகம் மற்றும் உலக புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான பதிப்புரிமை விடயங்கள்
8. ஆக்கவுரிமை வழங்கும் செயன்முறையை வினைத்திறன்மிக்கதாக ஆக்குதல்

(இ) அதன் I ஆம் நிரலின் (ஆங்கில மற்றும் தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) இல.7, இல.8, இல.35 மற்றும் இல. 36 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் I ஆம் நிரலின் (சிங்கள அறிவித்தலில் மாத்திரம்) இல. 34 மற்றும் 35 ஆகிய விடயங்களை முறையே இல. 36 மற்றும் இல. 37 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(உ) அதன் I ஆம் நிரலின் (ஆங்கில மற்றும் தமிழ் அறிவித்தலில் மாத்திரம்) இல. 37 முதல் இல. 39 வரையான விடயங்களை முறையே இல. 35 முதல் இல. 37 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(ஊ) அதன் II ஆம் நிரலின் இல. 34 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்;

35. புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்
36. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி

(எ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

14. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல இன்ஜினியரிங் சேர்விசஸ் (தனியார்) கம்பனி (KESCO)

(ஏ) அதன் III ஆம் நிரலின் “1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டம்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம்;

- 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்

(ஐ) அதன் III ஆம் நிரலின் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம் ;

- 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம்
- 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டம்

(19) அந்த அறிவித்தலின் “இல. 22. டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலின் இல. 8 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்;

9. விருத்தியடையும் போட்டிச் சந்தையில் பொது நலன்களைப் பாதுகாத்து தொலைத்தொடர்புக் கைத்தொழிலின் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.
10. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைவருக்கும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. அரச நிறுவனங்களுக்கு இடையில் தகவல் தொழினுட்பத்தை அறிமுகம் செய்வதன் மூலம் அரச சேவை வழங்களின் உற்பத்திதிறன் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்காக தகவல் தொழினுட்பத்தை ஆரம்பிப்பதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
12. தகவல் தொழினுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
13. கிராமிய பிரதேசங்களுக்கு தொடர்பாடல் வசதிகளை விஸ்தரிப்பதற்கு மையப்படுத்திய உறுதியான வலையமைப்பினை கட்டியெழுப்புதல்
14. 5G மற்றும் LTE+ போன்ற அதிர்வெண் வீச்சில் உயர் வினைத்திறனுடனான தொழினுட்பத்துக்கு முன்னுரிமை அளித்தல்

15. தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அறிமுகம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

(ஆ) அதன் I ஆம் நிரலின் இல. 9 மற்றும் இல. 10 விடயங்களை முறையே இல. 16 மற்றும் இல.17 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலின் இல. 7 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்;

8. கலம்பு லோட்டஸ் டவர் மெனேஜ்மன்ட் கம்பெனி பிரைவேட் லிமிடட்
9. நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு

(ஈ) அதன் III ஆம் நிரலின் “1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்” விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம்;

- 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

(20) அந்த அறிவித்தலின் “இல. 23. பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலின் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

23. கறுவா அபிவிருத்தி திணைக்களம்

(21) அந்த அறிவித்தலின் “இல. 24. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்” எனும் தலைப்பின் I,II மற்றும் III ஆம் நிரல்களின் பின்னர் பின்வரும் புதிய தலைப்பை உள்ளடக்குவதன் மூலம் :-

25. வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 1. வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் விடயங்களுடனும்; மற்றும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், செயற்படுத்தலும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்.<br>2. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற உரிய பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மனிதநேய ரீதியிலும் வழங்குதல். | 1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>2. வரை. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்<br>3. கட்டிடத் திணைக்களம்<br>4. அரசாங்கத் தொழில்சாலைகள் திணைக்களம்<br>5. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை<br>6. ஓஷன் விவ் டிவலப்மெண்ட் பிறைவேட் லிமிட்டெட்<br>7. அரச பொறியியல் கூட்டுத்தாபனம்<br>8. தேசிய இயந்திர உபகரண நிறுவனம்<br>9. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை<br>10. தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம்<br>11. இலங்கை பொறியியல் பேரவை<br>12. நிர்மாணிப்பு பாதுகாப்பு நிதியம் | • 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்<br>• 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கட்டிடக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்<br>• 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| 3. ஊழலும், வீண்விரயமும்; இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.<br>4. குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக சகல வசதிகளுடனான வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல் மற்றும் விருத்தி செய்தல்<br>5. கட்டுப்படியான வீடமைப்புத் திட்டங்களை நகர பிரதேசங்களில் விருத்திசெய்வதற்கு வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களிடமிருந்து முதலீடுகளை பெறுவதற்கு மேம்படுத்தல்<br>6. கொழும்பில் குறைந்த வருமான குடியிருப்புக்களிலுள்ள வதிவாளர்கள் பொருட்டு கட்டுப்படியான வீடுகளை அரசாங்க தலையீடு ஊடாக வழங்குவதற்கு வசதியளித்தல்<br>7. அத்தியாவசிய வசதிகள் அடங்கிய விரிவான வீடமைப்புத் திட்டங்களை நகர மற்றும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களில் விருத்திசெய்தல்<br>8. வீடமைப்பு அபிவிருத்திக்கான காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இயைபான சட்டங்களை திருத்துதல்<br>9. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்காகத் தரநியமங்கள் மற்றும் ஒழுக்கவிதிகளை உருவாக்குதல்<br>10. குறைந்த வருமானம் பெறுநர்கள் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள்* |
|---|---|---|
| அடங்கலான பொதுமக்களின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல்.<br>11. சூழல்நேயமிக்கதாக செலவுக்கேற்ற நலன்களைப் பெற்றுத்தரும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைபற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல்.<br>12. அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திரமயப் பொறியியல் சேவைகளை வழங்குதல்.<br>13. தொடர்புடைய சட்டதிட்டங்கள் மற்றும் தரவளவுகளுக்கமைய நிர்மாணக் கைத்தொழில்துறையின் பணிகளை ஒழங்குறுத்துதலும் பதிவுசெய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்துதலும்<br>14. நிர்மாணக் கைத்தொழிலுக்குரிய ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்தல் சேவைகளை வழங்குதல்<br>15. கனரக நிர்மாணத்துறை உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சியை வழங்குதல்.<br>16. கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலை மேம்படுத்துதல்<br>17. உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களை ஊக்குவித்தல்<br>18. உள்நாட்டு சிறிய மற்றும் மத்தியதர துணை ஒப்பந்தக்காரர்களை வலுவூட்டுதலும் பாதுகாப்பு வழங்குதலும்<br>19. பொருத்தமானதும் நிலைபேறானதுமான தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பின்தங்கிய கிராமிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | | |

| *நிரல் I*<br>*விடயங்களும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 20. தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளக் கூடியவாறு நிர்மாணக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நவீன பொறியியல் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்<br>21. ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>22. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் பற்றித் தேடிப்பார்த்து அதுபற்றிய புதிய திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்துதலும் பராமரித்தலும்<br>23. கிராமிய குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து நீர்பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற நீர்வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்<br>24. குடிநீரை விநியோகிக்கும் போது ஏற்படும் நீர் விரயத்தைத் தடுத்தல்<br>25. சமூக நீர்வழங்கல் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்திறனுடனும் ஒழுங்கு முறைக்கமையவும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>26. கிராமப்புற மக்களுக்கு சிறந்த தரத்திலான குடிநீரினை வழங்குவதற்காக சமூக நீர்வழங்கல் திட்டத்தைப் பராமரித்தலும் மேம்படுத்தலும்<br>27. நீர்த்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள் அபிவிருத்தி செய்து கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கலை நிலையாக மேற்கொள்ளல்<br>28. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற ஏனைய அனைத்து விடயங்கள்.<br>29. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் மேற்பார்வையிடுதல் | | |

EOG 10 - 0189

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.